**சார்பு நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**OS No. 95/2020**

**PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரோஜா | ஊர் | : | |
| க/பெ | : | மாரிமுத்து. | வட்டம் | : | |
| தொழில் | : | | மாவட்டம் | : | |
| வயது | : | | ஜாதி | : | |

**தேதி: 29.07.2025.**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

வழக்கு விவரங்கள் வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். எனக்கு தற்போது என்ன வயதுஎன்றால் 73 ஆகும். நிரூபண வாக்குமூலத்தில் எனக்கு வயது 59 என்று காட்டப்பட்டுளளது, அதற்கு யார் வழக்கறிஞருக்கு விவரம் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். எத்தனை இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 5 இலக்க சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 5 இலக்க சொத்து முதலில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் என் அப்பா ஆறுமுகத்திற்கு பாத்தியப்பட்டிருந்தது. ஆறுமுகத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு ஆண் பிள்ளை மற்றும் 3 பெண் மக்கள் ஆவர். மூத்தவர் வன்னிமுத்து, இரண்டாவது மீனாள், மூன்றாவது நம்புத்தாய், நான்காவது நான். என்னுடைய சகோதரர் வன்னிமுத்து இறந்துவிட்டார். அவருடைய மனைவி புஷ்பவள்ளி உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். அவரை இந்த வழககில் சேர்க்கவில்லை என்றால் அவரை வழக்கில் சேர்த்திருக்கிறேன். புஷ்பவள்ளி உயிருடன் இருப்பதால் அவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. என் அக்கா மீனாள் இறந்துவிட்டார். மீனாளின் வாரிசுகள்தான் 1 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால்ச ரிதான். 2ம் பிரதிவாதி சண்முகம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் இறப்பையும்

அவரது வாரிசுகளையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அதுபற்றிய விவரம் எனக்கு தெரியாது. 3வது சகோதரி நம்புத்தாயும் இறந்துவிட்டார். அவருக்கு மகேந்திரன் மற்றும் மகேஷ்வரி என இரண்டு பிள்ளைகள் உள்ளனர். மகேஷ்வரியை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 9 முதல் 12 பிரதிவாதிகள் வன்னிமுத்துவின் மக்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, தாவா சொத்திற்கு பட்டா எண் மற்றும் நான்குமால்கள் தெரியுமா என்றால் பட்டா உள்ளது, அதன் எண் தெரியாது. எனது தகப்பனார் 1981ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்து 3 வாரங்கள் கழித்து பெண் மக்களாகிய நாங்கள் மூன்றுபேரும் தலா ரூ.1000 வீதம் ரூ.3000 பெற்று கொண்டு தாவா சொத்துககளை பொறுத்து பாகம் வேண்டாம் என சொல்லி பாகப்பிரிவினை ஆவணத்தில் கையெழுத்து செய்து கொடுத்திருக்கிறோம் என்றால் இல்லை. எனது தகப்பனார் இறந்தபிறகு சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்து கொண்டோம்எ ன்றால் நாங்கள் நான்குபேரும் பாகம் பிரித்து கொண்டோம். வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். அவ்வாறு பிரிக்கப்பட்டதில் எனக்கு கிடைத்த பாகத்தை 05.03.2008ல் சிவக்குமார் என்பவருக்கு நானும் என்னுடைய மக்களும் கிரையம் கொடுத்திருக்கிறோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் கணினி நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே தேதியில் நானும் எனது மக்களும் சேர்ந்து பி.சேது என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் கணினி நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.03.2008ந்தேதி எங்களுக்கு கிடைத்த பங்கினை முத்துராமன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் கணினி நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (சாட்சி மீண்டும் முத்துராமன் மற்றும் ஒரு ரவி என்பவருக்கு மட்டும்தான் கிரையம் கொடுத்ததாக மாற்றி

சொல்கிறார்). மேற்படி ஆவணத்தில் மனோராசியாக வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுக்கப்பட்டதை கிரையம் கொடுப்பதாக கண்டுள்ளோம் என்றால் சரிதான். எனது சகோதரி மீனாள் என்பவரும் அவருக்கு பாகத்தில் கிடைத்த சொத்தை அவரது மகள் ஜோதிக்கு இனாம் செட்டில்மெண்டு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி இனாம் செட்டில்மெண்டு பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் கணினி நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.06.2020 ந் தேதி என்னுடைய பங்கு சொத்துக்களை விற்பனை செய்வதற்கு என்னுடைய மகன்களுக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் கணினி நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பவர் பத்திரத்தின் அடிப்படையில் எனது மகன்கள் ருத்ராதேவி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் கணினி நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நானும் எனது சகோதர சகோதரிகளும் வாய்மொழியாக ஏற்பட்ட பாகப்பிரிவினையின் அடிப்படையில் தனிதனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் கூட்டாகத்தான் அனுபவம் செய்து வருகிறோம். முதலில் கிடைத்த பாகத்தின் அடிப்படையில்தான் மேற்படி ஆவணங்கள் எழுதி கொடுக்கப்பட்டது, தாவா சொத்துக்களை பொறுத்து பாகம் பிரிக்கப்படவில்லை. எனது சகோதர சகோதரிகள் அவர்களுக்கு கிடைத்த பாகத்தினை தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவரவர் பாக சொத்திற்கு தனித்தனியாக பட்டா உள்ளது என்றால் எங்களுக்கு கூட்டுப்பட்டா உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பட்டா சுமார் 20 வருடங்களுக்கு முன்புள்ள பட்டா என்றும் தற்போது தனிப்பபட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழககில் கிரையம் பெற்றுள்ள நபர்களை சேர்க்கவில்லை என்றால் சரிதான். 10 ம் பிரதிவாதி திருமணம்

முடிந்து அபிராமம் கிராமத்தில் உள்ளார் என்றால் சரிதான். 11ம் பிரதிவாதி திருமணம் முடித்து காரைக்குடியில் உள்ளார் என்றால் சரிதான். 10 மற்றும் 11ம் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு இராமேஸ்வரம் முகவரிக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட நபர்களை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் நான் கூட்டு அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முதலிலேயே பாகம் பிரிக்கப்பட்டு தனித்தனியாக அனுபவம் செய்துவந்து கிரையம் கொடுத்துள்ள நிலையில் பாகம் பிரியவில்லை என பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது பங்காளிகளையே தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

**ஒம்/– செல்வி. கே.மும்தாஜ், பி.ஏ., எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, இராமநாதபுரம்.**